செய்தி வெளியீடு எண்.353 நாள் 29/9/2006

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை, இன்று (29.9.2006) தலைமைச்செயலகத்தில், ஜப்பான் வணிகம் மற்றும் தொழில் கழகத்தின் தலைவர் திரு.நோபு யமாகுச்சி (Mr.Nobuo Yamaguchi, Chairman, Japan Chamber of Commerce and Industry) தமிழக தொழில் வளர்ச்சித் தொடர்பாக சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது, சென்னையில் உள்ள ஜப்பான் தூதர் திரு.யோஷியாகி கொடக்கி (Consul General Mr.Yoshiaki Kodaki, Japan Consulate General, Chennai) உதவித் தூதர் திரு.யூஜி ஒக்கடா (Consul Mr.Yuji Okada, Japan Consulate General, Chennai) ஜப்பான் வணிகம் மற்றும் தொழில் கழகத்தின் துணைத் தலைவர் திரு.சுகோ மருமொரி (Mr.Chugo Marumori), தலைவர் திரு.சடோஷி யுமெட்சு (Mr.Satoshi Uematsu), மியாகொனோஜோ வணிகம் மற்றும் தொழில் கழகத்தின் தலைவர் திரு.கென்ஜி ஹிகஷி (Mr.Kenji Higashi, Chairman, The Miyakonojo Chamber of Commerce and Industry), ஜப்பான்–இந்தியா வர்த்தக நிலை குழுவின் தலைவர் திரு.இசமு நிட்டா (Mr.Isamu Nitta, Chairman, Standing Committee, Japan India Business Corporation Committee) மற்றும் தலைமைச்செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, நிதித் துறை செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு.சி.சந்திரமௌலி, தொழில்துறை சிறப்புச் செயலாளர் திரு.கே.ராஜாராமன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு.இராமசுந்தரம், இந்திய தொழில் வர்த்தக சம்மேளன தலைவரின் ஆலோசகர் திரு.பி.முராரி, இந்தோ–ஜப்பான் வர்த்தக மற்றும் தொழில் அமைப்பின் தலைவர் திரு.ஆர். வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.